பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
25 07 2024 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- இளைஞர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாகப் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- தமிழகத்துக்கான ரயில்வே திட்டங்களுக்கு முந்தைய காங்கிரஸ் அரசை விட ஏழு மடங்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
- தமிழக மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு நித்தி ஆயோக் கூட்டத்தில் முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் பங்கேற்க வேண்டும் என மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கேட்டுக் கொண்டுள்ளார்.
- காவிரியில் ஆகஸ்ட் மாதத்தில் 45 டிஎம்சி தண்ணீரை கர்நாடகம் திறந்துவிட வேண்டும் என தமிழக அரசு காவிரி மேலாண்மை ஆணையத்தில் வலியுறுத்தியுள்ளது.
- பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் வில்வித்தைப் பிரிவில் இந்திய வீரர்கள் இன்று பங்கேற்கின்றனர்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

இளைஞர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க அரசு உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ள சிறப்பு அம்சங்கள் குறித்து சமூக வலைதளத்தில் அவர் கருத்துகளைப் பகிர்ந்துள்ளார்.

வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட இளைஞர்களின் பங்கேற்பு அவசியம் என்று அவர் கூறியுள்ளார்.

இளைஞர்களுக்கு அதிக அளவில் வாய்ப்புகளை ஏற்படுத்த அனைத்து முயற்சிகளையும் அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகவும், பட்ஜெட்டில் இதற்காக அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதி செய்வதுடன் அனைத்துத் தரப்பினருக்கும் பயனளிக்கும் வகையில் மத்திய பட்ஜெட் அமைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கல்வி, உள்கட்டமைப்பு, விவசாயம், வேலைவாய்ப்பு உருவாக்கம் என அனைத்திற்கும் இந்த பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பட்ஜெட் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் புதிய உத்வேகம் அளிக்கும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

பல்வேறு நாளிதழ்கள் இந்த பட்ஜெட் குறித்து பாராட்டுத் தெரிவித்திருப்பதையும் திரு நரேந்திரமோடி சமூக வலைதளப்பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழக ரயில்வே திட்டங்களுக்கு முந்தைய காங்கிரஸ் ஆட்சிக் காலத்தின்போது ஒதுக்கப்பட்ட நிதியை விட தற்போது ஏழு மடங்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 2009-ம் ஆண்டு முதல் 2014-ம் ஆண்டு வரையிலான காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தமிழக ரயில்வே திட்டங்களுக்கு வெறும் 879 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டதாகக் கூறினார்.

தற்போது மத்திய பட்ஜெட்டில் மட்டும் தமிழக ரயில்வே திட்டங்களுக்கு ஆறாயிரத்து 362 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

மாநிலத்தில் கடந்த 10 ஆண்டுகளில் 687 ரயில்வே பாலங்களும், சுரங்கப்பாதைகளும், ஆயிரத்து 302 கிலோ மீட்டர் தொலைவிற்கு புதிய தண்டவாளங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

நித்தி ஆயோக் கூட்டத்தைப் புறக்கணிக்கப் போவதாக தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கூறி இருப்பது கண்டனத்திற்குரியது என்று தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.

தில்லியில் எமது செய்தியாளரிடம் பேசிய அவர், தமிழக மக்களின் நலனில் அக்கறை இன்றி முதலமைச்சர் செயல்படுவதாக குற்றம் சாட்டினார்.

நித்தி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்பதில்லை என்ற தமது முடிவை முதலமைச்சர் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று திரு எல் முருகன் கேட்டுக் கொண்டார்.

*( சவுண்ட்பைட் – எல் முருகன் ) ---49– செகண்ட்ஸ்*

**[]<<<>>>[]**

நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட வரி சீர்திருத்தங்கள் காரணமாக வரி வருவாய் அதிகரித்துள்ளதாக தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற வருமான வரி தின கொண்டாட்ட நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், முன் எப்போதும் இல்லாத வகையில் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகக் கூறினார்.

வெளிப்படையான நடைமுறைகள் மற்றும் நெறிப்படுத்தப்பட்ட செயல்முறைகள் காரணமாக கடந்த பத்து ஆண்டுகளில் வரி செலுத்துவோரின் எண்ணிக்கை 200 சதவீதமும், வரி வருவாய் 300 சதவீதமும் அதிகரித்திருப்பதாக திரு ஆர் என் ரவி குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் காவிரியில் ஆகஸ்ட் மாதத்தில் 45 டி எம் சி தண்ணீரை கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும் என தமிழக அரசு காவிரி மேலாண்மை ஆணையத்திடம் வலியுறுத்தியுள்ளது.

அந்த ஆணையத்தின் 32-வது கூட்டம் அதன் தலைவர் எஸ் கே ஹல்தர் தலைமையில் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

தமிழக அரசின் சார்பில் இக்கூட்டத்தில் பங்கேற்ற நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு மணிவாசன், தமிழகத்திற்கு உரிய நீரை கர்நாடக அரசு மாதந்தோறும் வழங்க வேண்டும் என வலியுறுத்தியதாக பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட்பைட் – மணிவாசன்) -44---- செகண்ட்ஸ்*

[]<<<>>>[]

தமிழகத்தில் விரைவில் 100 மின்சாரப் பேருந்துகள் இயக்கப்படும் என மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்கான ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மேலும் 400 மின்சாரப் பேருந்துகளை வாங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

சென்னையில் மினி பேருந்துகளை இயக்குவது குறித்து புதிய கொள்கை வெளியிடப்பட்டு, புதிய வழித்தடங்களும் அறிவிக்கப்படும் என திரு சிவசங்கர் கூறினார்.

[]<<<>>>[]

தேனி மாவட்ட மலை கிராமங்களுக்கு வனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சாலைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாநில வனத்துறை அமைச்சர் திரு மதிவேந்தன் கூறியுள்ளார்.

அம்மாவட்டத்தின் மயிலாடும்பாறை பகுதிகளில் உள்ள மலை கிராமங்களுக்கு சாலைகள் மற்றும் பாலங்கள் அமைப்பது தொடர்பாக அவர் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், வனக்கட்டுப்பாட்டு பகுதிகள் குறித்து இப்பகுதி மக்களுக்கு முறையாக வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும் என வனத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

[]<<<>>>[]

சென்னை கிளாம்பாக்கம் ரயில் நிலையம் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் செயல்பட தொடங்கும் என தெற்கு ரயில்வே பொது மேலாளர் திரு ஆர் என் சிங் கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் புதிதாக 40 ரயில்வே மேம்பாலங்கள் அமைக்கப்பட உள்ளதாகக் கூறினார்.

ராமேஸ்வரத்தில் அமைக்கப்பட்டு வரும் பாம்பன் ரயில் பாலப் பணிகள் செப்டம்பர் மாதத்துக்குள் நிறைவடையும் என்று அவர் தெரிவித்தார்.

சென்னையின் நான்காவது ரயில் முனையத்தை வில்லிவாகத்திற்குப் பதிலாக பெரம்பூரில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் திரு ஆர் என் சிங் தெரிவித்தார்.

[]<<<>>>[]

பங்களாதேஷில் இட ஒதுக்கீடு தொடர்பான போராட்டங்கள் தணிந்துள்ளதை அடுத்து, அந்நாட்டு அரசு ஊரடங்கைத் தளர்த்தியுள்ளதால் அங்கு இயல்பு நிலை திரும்பி வருகிறது.

[]<<<>>>[]

தான்சானியா நாட்டின் நாடாளுமன்றத் தலைவர் டாக்டர் துலியா ஏக்சன், புதுதில்லியில் குடியரசுத்தலைவர் மாளிகையில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவைச் சந்தித்துப் பேசினார்.

[]<<<>>>[]

அஸ்ஸாம் முதலமைச்சர் திரு ஹிமந்தா பிஸ்வா சர்மா, தில்லியில் மத்தியப் மின்துறை அமைச்சர் திரு மனோகர்லாலை சந்தித்து, மாநிலத்துக்கான திட்டங்கள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

[]<<<>>>[]

மறைந்த பிரபல பாடகர் முகேஷின் நூற்றாண்டையொட்டி, அவரது நினைவு தபால் தலையை மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு கஜேந்திரசிங் ஷெகாவாத் நேற்று புதுதில்லியில் வெளியிட்டார்.

[]<<<>>>[]

மத்தியப் பிரதேச முதலமைச்சர் திரு மோகன் யாதவ் நேற்று திருப்பூரில் பனியன் உற்பத்தி நிறுவனங்களை பார்வையிட்டு அவற்றின் செயல்பாடுகள் குறித்துக் கேட்டறிந்தார்.

**[]<<<>>>[]**

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூரில் கூட்டுத்துறை சார்பில் ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான கடனுதவிகளை மாநில அமைச்சர் திரு தா மோ அன்பரசன், பயனாளிகளுக்கு வழங்கினார்.

**[]<<<>>>[]**

பெரம்பலூர் மாவட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், ஜல்ஜீவன் இயக்கம் ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப் பணிகளை, ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

கரூரில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நாளை நடைபெறும் என ஆட்சியர் திரு தங்கவேல் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

கன்னியாகுமரி மாவட்டம் பத்மனாபபுரத்தில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் ஆட்சியர் திருமதி அழகுமீனா தலைமையில் நடைபெற்றது.

**[]<<<>>>[]**

ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் நீர்த்தேக்க பகுதியில் விவசாயிகள் வண்டல் மண் எடுக்க தற்காலிகமாக தடை விதிக்கப்படுவதாக நீர்வளத்துறை கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

சென்னை அம்பத்தூர் மண்டலத்தில் சிவா – விஷ்ணு குளம் 36 லட்சம் ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்டுள்ளதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் முதலாவதாக வில்வித்தைப் பிரிவில் இந்திய வீரர்கள் இன்று பங்கேற்கின்றனர்.

ஒலிம்பிக் போட்டிகள் முறைப்படி நாளை தொடங்கவுள்ள நிலையில் அதற்கு முன்பாகவே சில போட்டிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

இன்று நடைபெறும் வில்வித்தை தனிநபர் போட்டிகளில் இந்திய வீராங்கனைகள் தீபிகா குமாரி, அங்கிதா பகத், பஜன் கவுர் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

ஆடவர் பிரிவில் தீரஜ், தருண்தீப் ராய், பிரவீன் ஜாதவ் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

**[]<<<>>>[]**